ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2365/30 - 2024 ජනවාරි මස 03 වැනි බදාදා - 2024.01.03

*2365/30 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 03 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு**

*98 ஆம் உறுப்புரையின் (8) ஆம் உப உறுப்புரையின் கீழான கட்டளை*

*1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 18 ஆம் பிரிவிற்கமைய 2023 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வுடன் தொடர்பான 2023 ஆம் ஆண்டின் பிரதான தேருநர் இடாப்பு 2023, ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.*

*02. 2023, ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதியன்று 2023 ஆம் ஆண்டின் பிரதான இடாப்பு, 2023 (1) குறைநிரப்பு தேருநர் இடாப்பு மற்றும் 2023(2) குறைநிரப்பு தேருநர் இடாப்பு செல்லுபடியாகுவதுடன் அதற்கமைய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 98 ஆவது உறுப்புரையின் (8) ஆவது உப உறுப்புரையின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் இந்தக் கட்டளை ஊடாக, 97 ஆவது உறுப்புரையின் கீழான பிரகடனத்தின் பிரகாரம் மற்றும் 98 ஆவது உறுப்புரைப் பிரகாரம், இங்கு அட்டவணையின் I ஆவது நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் தெரிவு செய்வதற்கு உரித்துடைய உறுப்பினர்களின் எண்ணிக்கை அந்த அட்டவணையின் II ஆவது நிரலில் நேரொத்த குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கையாக இருத்தல் வேண்டுமென அத்தாட்சிப்படுத்தப்படுகின்றது.*

**ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க,**
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

**எம். ஏ. பீ. சீ. பெரேரா,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

**அமீர் பாயிஸ்,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

**அனுசயா சண்முகநாதன்,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல் ஆணைக்குழு,
ராஜகிரிய,
*2024, சனவரி 03.*

**அட்டவணை**

| நிரல் I<br>தேர்தல் மாவட்டத்தின் பெயர் | நிரல் II<br>ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் தெரிவுசெய்வதற்கு உரித்துடைய உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 01-கொழும்பு | 18 |
| 02-கம்பஹா | 18 |
| 03-களுத்துறை | 11 |
| 04-கண்டி | 12 |
| 05-மாத்தளை | 5 |
| 06-நுவரெலியா | 8 |
| 07-காலி | 9 |
| 08-மாத்தறை | 7 |
| 09-அம்பாந்தோட்டை | 7 |
| 10-யாழ்ப்பாணம் | 7 |
| 11-வன்னி | 6 |
| 12-மட்டக்களப்பு | 5 |
| 13-திகாமடுல்ல | 7 |
| 14-திருகோணமலை | 4 |
| 15-குருநாகல் | 15 |
| 16-புத்தளம் | 8 |
| 17-அநுராதபுரம் | 9 |
| 18-பொலன்னறுவை | 5 |
| 19-பதுளை | 9 |
| 20-மொனராகலை | 6 |
| 21-இரத்தினபுரி | 11 |
| 22-கேகாலை | 9 |
| | 196 |

EOG 01-0037

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.